DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of civil procedure)
IN THE COURT OF SUBORDINATE JUDGE,
KEERANUR
CASE NO.OS.No.135 /2022
Depostition of witness of Plaintiff – P.W.1(முருகையா)
09.10.2023

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

எனது தகப்பனார் பெயர் பழனியாண்டி ஆகும். எனது தகப்பனாரும் சன்னாசி என்பவரும் சேர்ந்து தாவா சொத்தை கிரையம் பெற்றதாக வழக்கில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 2ம்பிரதிவாதியின் முன்னோர்கள் தான் எனது பாட்டனாருக்கு கிரையம் கொடுத்ததாக வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 1958 கிரைய ஆவணம் வா.சா.ஆ–1ல் சைதா முகமது மகன்கள் காதர் மைதீன் , பீர்கன்னி, முகமது மீரான் ஆகியோர் கிரையம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து சைதா முகமதுவிற்கோ அவரது மகன்களுக்கோ பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சேக்முகமதுவின் பேரன் தான் 2ம் பிரதிவாதி முகமது காசிம் என்றால் சரியல்ல. சமஸ்தான காலம் மற்றும் செட்டில்மெண்ட் காலத்தில் தாவா சொத்தின் புல எண்.93/1 என்றால் சரிதான். சர்வே எண்.93/1 செட்டில்மெண்ட், SLR ல் சேக் முகமது பெயரில் உள்ளது என்றால் சரிதான். ரீ செட்டில்மெண்டிலும் பட்டா எண்.136 ல் கா.சேக் முகமது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ரீ செட்டில்மெண்ட் ஆவணம் நான் தாக்கல் செய்தது தான். சர்வேஎண்.93/1 நிலஉடைமை மேம்பாட்டு திட்டத்தில் ABC என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.93/1c என்பது 0.89.0 ஏர்ஸ் நிலம் முகமது காசிம் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். அந்த முகமது காசிம்தான் தாவா சொத்தை 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு எனது பெயரிலோ எனது தகப்பனார் பெயரிலோ எனது சித்தப்பா பெயரிலோ இதுநாள் வரை பட்டா ஏற்படவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வீரையா கிரையம் வாங்கிய பிறகு அவரது பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 1ம் பிரதிவாதிக்கு 2ம்பிரதிவாதி கிரையம் கொடுத்த விவரம் தெரியும் என்றும் அதனால் அந்த ஆவணத்தின் நகல் தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரிதான். தாவா சொத்தைப்பொறுத்து வா.சா.ஆ.2 ஆவணம் செல்லாது என பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் சைதா முகமதுவிற்கோ அவரது மகன்களுக்கோ உரிமையான சொத்து அல்ல என்றால் சரியல்ல. அதனால் வா.சா.ஆ.1 கிரையம் சட்டப்படி செல்லக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து 2ம் பிரதிவாதி

முகமது காசிம் என்பவரின் பாட்டனார் கா.சேக் முகமது என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றும் அவரது வாரிசுஎன்ற வகையில் 2ம் பிரதிவாதி சட்டப்படி உரிமையாளர் என்ற முறையில் 1ம் பிரதிவாதிக்கு கிரையம் ஏற்படுத்தியுள்ளார் என்றும் அதன் அடிப்படையில் 1ம் பிரதிவாதிக்கும் உரிமை ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தை 1ம் பிரதிவாதி வீரையா விவசாயம் செய்து வருகிறாரா என்றால் யாரும் விவசாயம் செய்யவில்லை. தாவா சொத்தை கிரையம் பெற்ற பிறகு 1ம் பிரதிவாதி வீரையா தான் விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. எனக்கு சட்டப்படி எவ்வித பரிகாரமும் கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல.
(மறுவிசாரணை இல்லை.)